FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March- 2018

| தரம் :- 12 (2019) | கிறிஸ்தவம் | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

❖ **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து புள்ளடி இடுக.**

01. திருவிவிலியம் கிறிஸ்தவர்களாகிய எமக்கு ஓர் உன்னதமான நூலாக இருக்கக்காரணம்
    1) அதற்குள் இறைவார்த்தை உள்ளடக்கப்பட்டுள்ளது.
    2) சட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.
    3) பழமொழிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.
    4) அறிவுரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.
    5) விழுமியக் கோட்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

02. ஆயத்துவ இறை ஏவுதல் எனப்படுவது
    1) இறைவார்த்தையை எழுதுவதற்காக வழங்கப்படுகின்ற கட்டளை
    2) இறைவனின் செய்தியை வெளியிடுவதற்காக வழங்கப்படுவதாகும்.
    3) செயலாற்றுவதற்காகப் பெற்றுக்கொள்ளும் இறை ஏவுதல்
    4) வாயினால் இறைவார்த்தையை அறிவிப்பதாகும்.
    5) எழுத்தினால் இறைவார்த்தையை அறிவிப்பதாகும்.

03. தாவீதின் பரம்பரைக்குச் சொந்தமானவரும் யூதாவின் கடைசி அரசனுமானவர்
    1) சவுல் அரசன் 2) யோயாக்கீன் அரசன் 3) யோயாக்கீம் அரசன்
    4) செதேக்கிய அரசன் 5) சாலமோன் அரசன்

agaram.lk

04. இறைவனுக்குரியதை மனிதன் தனதாக்கிக் கொள்வதற்காக எடுக்கும் முயற்சி …………………… என அழைக்கப்படும்.
    1) பக்தி 2) தியானம் 3) பயம் 4) நம்பிக்கை 5) பாவம்

05. இணைச்சட்ட (D) மரபு எழுத்துவடிவம் பெற்றது
    1) கி.மு. 900 2) கி.மு. 621 3) கி.மு. 400 4) கி.மு. 722 5) கி.மு. 950

06. நாடு திரும்பிய பின் எருசலேம் மதிலைக் கட்டியெழுப்புவதில் தலைமை தாங்கியவர்
    1) எஸ்ரா 2) தாரியுஸ் 3) நெகேமியா 4) செருபாபேல் 5) சைரசு

07. உலகில் பல இனமக்கள் சிதறிச் சென்ற முறையையும், அவர்களுக்கு வெவ்வேறான மொழி உருவான முறையையும் விளக்கும் கதை
    1) பெருவெள்ளக்கதை 2) காயீன் ஆபேல் கதை 3) ஆதாம் ஏவாள் கதை
    4) படைப்புக் கதை 5) பாபேல் கோபுரக் கதை

08. குலமுதுவர்கள் காலம் எனப்படுவது
    1) கி.மு. 950 – கி.பி. 100 3) கி.மு. 2000 – 1700 3) கி.மு. 2000 – 1750
    4) கி.பி. 80 – 90 5) கி.மு. 650 – கி.பி. 700

09. இஸ்ராயேல் மக்கள் அடிமைத்தனத்திலிருந்த போது பட்டகசப்பான துன்பங்களை அடையாளப்படுத்துவது
1) புளிப்பற்ற அப்பம்  2) இரசம் அருந்துதல்  3) நற்கருணை உட்கொள்ளல்
4) கசப்புக் கீரை உண்ணல்  5) பாஸ்கா செம்மறியை உண்ணல்

10. பார்வோனுக்கு பயந்து தப்பியோடிய மோசே வாழ்ந்த இடம்
1) மிதியான்  2) எகிப்து  3) பபிலோன்  4) உரோம்  5) சிக்கேம்

11. “உடன்படிக்கை” என்பதன் எபிரேயச் சொல்
1) பரூசியா  2) ஹொக்மா  3) அபாத்  4) பெரித்  5) ஷாமார்

12. இஸ்ராயேல் மக்கள் சீனாய் உடன்படிக்கையில் பெற்ற அழைப்பைப்போல இன்றைய கிறிஸ்தவர்கள் அழைப்புப் பெறுவது
1) உறுதிப்பூசுதல் மூலம்  2) திருமுழுக்கின் மூலம்  3) நற்கருணை மூலம்
4) ஒப்புரவின் மூலம்  5) அன்பியம் மூலம்

13. பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொள்க.
✦ இறைவனுக்கும் இஸ்ராயேல் மக்களுக்குமிடையில் நடுநிலையாளர்
✦ இஸ்ராயேல் மக்களின் விடுதலை தலைவன்
✦ இஸ்ராயேல் மக்களை இறைமக்களாக உருவாக்கும் வழிகாட்டி

இக்கூற்றுகளுக்கு பொருத்தமானவர்
1) யேசுக்கிறிஸ்து  2) ஆபிரகாம்  3) மோசே  4) ஆரோன்  5) யோசுவா

14. “தாவீது அரசரின் பரம்பரையிலிருந்து புதிய தளிர் ஒன்று புற்பபடும்” இங்கு புதிய தளிர் என்பது
1) மெசியா  2) புதிய இஸ்ராயேல்  3) மீட்பு  4) ஈசாக்  5) யோவான்

15. “எசாயா” என்பதன் பொருள்
1) இறைவன் உயர்த்துகின்றார்  2) இறைவன் நிறுவினார்
3) இறைவன் வலிமைப்படுத்துகின்றார்  4) இறைவன் மீட்கிறார்
5) இறைவன் மீட்பராக இருக்கின்றார்

agaram.lk

16. ஆமோஸ் இறைவாக்கினர் தமது தொழிலாகத் தேர்ந்து கொண்டது
1) விவசாயம்  2) பொருளாதார பதவி  3) நிர்வாகத்துறை
4) மீன்பிடித்தொழில்  5) ஆடு மேய்த்தல், அத்தி வளர்த்தல்

17. கிறிஸ்துவின் காலத்தில் பலஸ்தீனாவின் ஆட்சி அதிகாரத்திற்கு உரிமையாயிருந்தவர்கள்
1) உரோமையர்  2) கிரேக்கர்  3) ஆசீரியர்  4) அமோரியர்  5) எகிப்தியர்

18. யூத மக்கள் உரோமையருக்கு செலுத்த வேண்டிய இரு வரிகள்
1) சுங்க வரி வருமான வரி  2) உரோமைப் பேரரசுக்குரிய வரி, கோவிலுக்கான வரி
3) நிலவரி, ஆலயவரி  4) நிலவரி, சுங்கவரி  5) வருமானவரி, சுங்கவரி

19. “சாதோக்” குருவின் பரம்பரையில் வந்தவர்கள்
1) பரிசேயர்  2) எஸ்சேனியர்  3) சதுசேயர்  4) செலஸ்தியர்  5) எமோரியர்

20. நீதியோடும், நியாயத்தோடும் வாழ்வதற்காக இறைவனில் நம்பிக்கை வைத்து பாடப்பட்ட திருப்பாடல்
1) புகழ்ச்சிப்பாடல்  2) புலம்பல் பாடல்  3) நன்றிப்பாடல்
4) ஞானபாடல்  5) நம்பிக்கையின் பாடல்

(20X1=20 புள்ளிகள்)

## பகுதி II

**பகுதி "அ" இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி "ஆ" இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிந்தெடுத்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

### "அ" பகுதி

01. அ) இறை ஏவுதலால் நூல்களாக எழுதப்பட்ட திருமறை நூல்களின் நோக்கங்கள் நான்கை 2 தீமொத் 3 : 16 இன் படி எடுத்துக்காட்டுக.

ஆ) கலிலேயாக் கடலைச் சுற்றியுள்ள முக்கியமான நகர்கள் நான்கு தருக.

இ) சாக்கடல் அல்லது உப்புக்கடல் பற்றிய நான்கு விடயங்கள் தருக.

ஈ) நீதித்தலைவர்கள் நால்வரின் பெயர்களை தருக.

உ) பாஸ்கா வழிபாட்டின் முக்கிய பகுதிகள் 4 தருக.

(5X4=20 புள்ளிகள்)

02. அ) யாவே பாரம்பரீயத்தில் இறைவன் மனித உருவில் எடுத்துக் காட்டப்படுகின்றார் என்பதற்கு நான்கு உதாரணங்கள் தருக.

ஆ) இறை அன்பிற்கு எதிராக பாவம் செய்த மனிதன் சகோத அன்புக்கும் எதிராக செயற்பட்ட விதத்தினை காட்ட தொடக்கநூல் ஆசிரியர் முன்வைக்கும் உத்திகள் 4 தருக.

இ) ஏலோகிம் மரபில் இறைவன் மேன்மை மிக்கவர் மனித உருவில் எடுத்துக்காட்டப்படவில்லை என்பதற்கு முன்வைக்கும் விடயங்கள் நான்கு தருக.

ஈ) தொ.நூல் 12, தொ. நூல் 22 போன்ற அதிகாரங்களில் ஆபிரகாமின் விசுவாசப் பயணம் பற்றி கூறப்படும் உண்மைகள் நான்கின் மூலம் எடுத்துக்காட்டுக.

உ) குலமுதுவர்கள் வழியாக இஸ்ராயேல் மக்கள் பெற்ற சேவைகள் 4 தருக.

(5X4=20 புள்ளிகள்)

03. அ) பாலைவனப் பயணத்தின் போது இஸ்ராயேல் மக்கள் முறுமுறுத்த முக்கிய சந்தர்ப்பங்கள் 4 தருக.

ஆ) பத்துக்கட்டளைகளின் பண்புகள் 4 தருக.

இ) மெசியா பற்றி எசாயா இறைவாக்கினர் முன்வைக்கும் நான்கு அம்சங்களும் எவை.

ஈ) இறைவாக்கினரின் அழைப்பில் காணப்படும் பொதுவான பண்புகள் 4 தருக.

உ) எபிரேய ஞானத்தின் பிரிவுகள் நான்கையும் எழுதுக.

(5X4=20 புள்ளிகள்)

agaram.lk

## "ஆ" பகுதி

04. அ) இறைவாக்கினரின் அழைப்பின் பொதுப்பண்புகளை எசேக்கியேல் இறைவாக்கினரின் அழைப்பின் மூலம் எடுத்துக் காட்டி விளக்குக.

ஆ) ஒசேயா இறைவாக்கினரின் உடன்படிக்கை வாழ்வு பற்றிய போதனைகளை விளக்குக.

*(20 புள்ளிகள்)*

05. அ) தொடக்க நூலில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் காணப்படும் பாவத்தின் வளர்ச்சியின் சந்தர்ப்பங்கள் இரண்டைக் குறிப்பிட்டு, அவற்றில் முன் வைக்கப்படும் செய்திகள் இரண்டு வீதம் விளக்குக.

ஆ) மோசேயின் தலைமைத்துவப் பண்புகளிலிருந்து நீர் பெற்றுக் கொள்ளக்கூடிய வழிகாட்டல்களை 20 வரிகளில் எழுதுக.

*(20 புள்ளிகள்)*

06. அ) சமநோக்கு நற்செய்திக்கும் யோவான் நற்செய்திக்கும் இடையிலான ஒற்றுமைகளை 5 காரணங்கள் தந்து விளக்குக.

ஆ) கிறிஸ்துவின் காலத்தில் பலஸ்தீனாவின் பின்னணியை விளக்குக.

*(20 புள்ளிகள்)*

agaram.lk